09.06.2026.
எஸ்.சி.எண்.11/2021

Crl.M.P.4465/2023 மனுவில் 11.12.2023 பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் அ.சா. 10 ராஜேஷ்கண்ணன் மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரி குறுக்கு விசாரணை**

நானும் வழக்கில் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தியும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள்தான். இறந்தவர் எனக்கு தெரிந்தவர் மற்றும் உறவினர் என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்த தாளில் என்ன விவரம் எழுதப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியும். நான் காவல்நிலையத்தில் வைத்து அதில் கையெழுத்து செய்தேன். கத்தியின் நீளம் சுமார் 1.1/2 அடியிருக்கும். டி–சர்ட்டை கைப்பற்றினார்கள். அது வெள்ளை மற்றும் நீலக்கலரில் இருந்தது. அதை கைப்பற்றியது சம்மந்தமாக எதிரியின் வீட்டில் வைத்து கையெழுத்து செய்தேன். எதிரிக்கும் எனக்கும் ஏற்கனவே சண்டை ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் எனக்கும் ஏற்கனவே முன்பகை இருந்ததால் எதிரிக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்ன நாளில், நேரத்தில் என் முன்னிலையில் வழக்கு தடயம் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும், எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை– இல்லை.

PADMANABAN VENKATASAMY

Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.06.09 16:11:16 +0530

Principal District Judge,
Dindigul.

09.06.2026.
எஸ்.சி.எண்.11/2021

Crl.M.P.4465/2023 மனுவில் 11.12.2023 பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் அ.சா. 12 முத்துக்குமார் மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

எதிரி குறுக்கு விசாரணை

நான் முதல் விசாரணையில் சொன்ன நாளில், நேரத்தில் பிரேதத்தை அடையாளம் காட்டவில்லை என்றும், பிரேத பரிசோதனைக்கு பின்னர் அதை நல்லடக்கத்திற்காக உறவினர்களிடம் ஒப்படைக்கவில்லை என்றும், சாபொ.4 ஐ தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

PADMANABAN VENKATASAMY

Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.06.09 16:11:28 +0530

Principal District Judge,
Dindigul.

09.06.2026.
எஸ்.சி.எண்.11/2021

Crl.M.P.4465/2023 மனுவில் 11.12.2023 பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் அ.சா. 13 ராஜலட்சுமி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

எதிரி குறுக்கு விசாரணை

நான் முதல் விசாரணையில் சொன்ன நாளில், நேரத்தில் மதுரை தடய அறிவியல் ஆய்வகத்திற்குச் சென்று ஆவணங்களைப் பெற்று நீதித்துறை நடுவர் மன்றத்திலும், ஆய்வாளர் வசமும் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. மறு விசாரணை இல்லை.

PADMANABAN VENKATASAMY

Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.06.09 16:11:40 +0530

Principal District Judge,
Dindigul.